DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 91/2025 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | கிரேசி |
| Father’s /Husband Name | : | ஜெய்சங்கர் |
| Village | : | சோத்தங்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 30 |
| Occupation | : | பட்டத்தாரி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 19th day June 2025.
A1 to A3 present.

**முதல் விசாரணை:–**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் எனது எதிர் வீட்டில் வசித்து வருகிறார்கள். கடந்த 26.09.2021 ம் தேதி மாலை 04.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது இடப்பிரச்சனை தொடர்பாக பிரச்சனை நிலுவையில் இருந்த நிலையில் எங்கள் வீட்டிலிருந்த பலா மற்றும் கொய்ய மரங்களை ஆஜர் எதிரிகள் வெட்டிவிட்டார்கள். இது சம்மந்தமாக ஆஜர் எதிரிகள் வீட்டு வாசலில் வந்து நின்றுக்கொண்டு குச்சிக்காரி, தேவுடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் தெருவில் உள்ளவர்கள் முன்பு திட்டினார், அதில் எனக்கு மிகுந்த மனஉளைச்சலாகவும், அசிங்கமாகவும் இருந்தது. அதன்பிறகு ஆஜர் 1 வது எதிரி அரிவாளால் எனது இடது கால் முட்டிக்கு கீழ் வெட்டினார். அதில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. 2 மற்றும் 3 வது எதிரிகள் கையில் வைத்திருந்த மூங்கில் கம்பால் என்னை உடம்பில் அடித்தார்கள். போகும் போது ஆஜர் எதிரிகள் கையில் வைத்திருந்த அரிவாளை காட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள். அதில் எனக்கு உயிர் பயம் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக எனது அக்கா ஜெயஸ்ரீ நன்னிலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். இது சம்பந்தமாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி நன்னிலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது நான் கொடுத்தது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எதிரி தனசேகரன் எனக்கு பெரியப்பா மற்ற எதிரிகள் இருவரும் எனக்கு அண்ணன் முறை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் மீதும் எங்கள் மீதும் பல வழக்குகள் உள்ளதென்றால் சரிதான். சம்பவ இடத்தில் சுமார் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 10 நபர்கள் இருந்தார்கள். என் அம்மா மற்றும் அக்கா நான் சத்தம் போட்ட பிறகு தான் வந்தார்கள் என்றால் இல்லை அவர்கள் என்னை வெட்டுவதற்கு முன்பே வந்துவிட்டார்கள். அக்கா எங்கள் வீட்டிற்கு

எதார்த்தமாக எங்களை பார்ப்பதற்காக வந்திருந்தார். புகார் வாக்குமூலத்தில் சம்பவம் எனது அக்காவிற்கும் அம்மாவிற்கும் தெரியுமென்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். புகாரில் 10 நபர்கள் பார்த்த விவரத்தை கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். புகாரில் மரங்கள் வெட்டிய விவரங்களை கூறினேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த பிறகு மருத்துவமனை சென்றேன். மருத்துவமனையில் கொரோனா சமயம் என்பதால் என்னை வீட்டிற்கு கட்டு போட்டு அனுப்பிவிட்டார்கள். நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S
BHARATHIDHASAN
DN: cn=M S
BHARATHIDHASAN,
ou=TIRUVARUR, o=TAMIL
NADU STATE JUDICIAL
SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.07.21 01:54:38
+0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 91/2025 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | ஸ்ரீமதி |
| Father's /Husband Name | : | ஜெய்சங்கர் |
| Village | : | சோத்தங்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 57 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 19th day June 2025.
A1 to A3 present.

**முதல் விசாரணை:–**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா. 1 கிரேசி எனது மகள். ஆஜர் எதிரிகள் எங்கள் எதிர் வீட்டில் வசித்து வருகிறார்கள். ஆஜர் எதிரி குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் நீண்ட நாட்களாக சொத்துபிரச்சனை இருந்து வருகிறது. கடந்த 26.09.2021 ம் தேதி மாலை 04.00 மணியளவில் எங்கள் வீட்டில் இருந்த பலா மரத்தை ஆஜர் எதிரிகள் வெட்டிவிட்டார்கள். இது சம்மந்தமாக எனது மகள் அ.சா. 1 கிரேசி ஆஜர் எதிரிகளிடம் கேட்டபோது ஆஜர் எதிரிகள் எங்கள் வீட்டு வாசலில் வந்து நின்றுக்கொண்டு குச்சிக்காரி, தேவுடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் தெருவில் உள்ளவர்கள் முன்பு திட்டினார், அதன்பிறகு ஆஜர் 1 வது எதிரி அரிவாளால் எனது மகள் அ.சா. 1 ன் இடது கால் முட்டிக்கு கீழ் வெட்டினார். அதில் அவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. 2 மற்றும் 3 வது எதிரிகள் கையில் வைத்திருந்த மூங்கில் பிளாச்சால் அ.சா. 1 ஐ உடம்பில் அடித்தார்கள். போகும் போது ஆஜர் எதிரிகள் கையில் வைத்திருந்த அரிவாளை காட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள். அதில் எங்களுக்கு உயிர் பயம் ஏற்பட்டது. அ.சா. 1 க்கு ஏற்பட்ட காயத்திற்காக எனது பெரிய மகள் ஜெயஸ்ரீ மற்றும் நானும் நன்னிலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1 வது எதிரி என்னுடைய கொழுந்தனார் என்றால் சரிதான். அ.சா. 1 ன் காலில் வெட்டப்பட்டு சத்தமிட்டபோது நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான். போலிசார் புகார் வாக்குமூலம் பெற்றபோது விசாரித்தார்கள். சம்பவத்திற்கு 5 நாட்களுக்கு பிறகு விசாரித்தார்களா என்றால் இல்லை அதற்கு முன்பே விசாரித்தார்கள். எங்கள் தரப்பினர் மீதும் எதிரிகள் தரப்பினர் மீதும் பல வழக்குகள் உள்ளதென்றால் சரிதான். போலிசார் விசாரனையில் மரங்கள்

வெட்டிய விவரத்தை கூறினேனா என்றால் கூறினேன். இடப்பிரச்சனை தொடர்பாக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா. 1 ன் காயத்திற்கும் எதிரிக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S
BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.07.21 01:54:50 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 91/2025 |
| Deposition of witness | : | PW-3 |
| Name | : | ஜெயஸ்ரீ |
| Father's /Husband Name | : | ராஜசேகர் |
| Village | : | முடிகொண்டான் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 37 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 19th day June 2025.
A1 to A3 present.

**முதல் விசாரணை:–**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா. 1 கிரேசி எனது தங்கை. ஆஜர் எதிரிகள் வீடு எனது தாயார் வீட்டிற்கு எதிர் வீடாகும். எனது தாயார் குடும்பத்திற்கும் ஆஜர் எதிரிகள் குடும்பத்திற்கும் இடப்பிரச்சனை தொடர்பாக பிரச்சனை இருந்து வந்தது. எனது அம்மாவை பார்ப்பதற்காக கடந்த 26.09.2021 ம் தேதி அம்மா வீட்டிற்கு சென்றேன். அப்போது மாலை 04.30 மணியளவில் ஆஜர் எதிரிகள் மூவரும் எனது அம்மா வீட்டு வாசலில் நின்று கொண்டு குச்சிக்காரி, தேவுடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் தெருவில் உள்ளவர்கள் முன்பு திட்டினார்கள், அதன்பிறகு ஆஜர் 1 வது எதிரி அரிவாளால் எனது தங்கை அ.சா. 1 ன் இடது கால் முட்டிக்கு கீழ் வெட்டினார். அதில் அவருக்கு வெட்டுக்காயம் ஏற்பட்டது. 2 மற்றும் 3 வது எதிரிகள் கையில் வைத்திருந்த மூங்கில் கம்பால் அ.சா. 1 ஐ உடம்பில் அடித்தார்கள். போகும் போது ஆஜர் எதிரிகள் கையில் வைத்திருந்த அரிவாளை காட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள். அதில் எங்களுக்கு உயிர் பயம் ஏற்பட்டது. அ.சா. 1 க்கு ஏற்பட்ட காயத்திற்காக நன்னிலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1 வது எதிரி என்னுடைய பெரியப்பா என்றால் சரிதான். மற்ற எதிரிகள் எனக்கு தம்பி முறை என்றால் சரிதான். நான் திருமணம் செய்து சென்றது முடிகொண்டான் கிராமம் என்றால் சரிதான். எனது தாயார் மீதும் எதிரிகள் மீதும் வழக்குகள் உள்ளதென்றால் சரிதான். நான் சத்தம் கேட்டு சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான் ஆனால் நான் இருந்தபோது தான் வெட்டினார். வழக்கு தொடர்பாக போலிசார் விசாரித்தார்களா என்றால் சம்பவத்தன்றும் அதற்கு மறுநாளும் விசாரித்தார்கள். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும்

நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.07.21 01:54:56 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 91/2025 |
| Deposition of witness | : | PW-4 |
| Name | : | **சந்திரகுப்தன்** |
| Father's /Husband Name | : | மணி |
| Village | : | சோத்தக்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 44 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 19th day June 2025.
A1 to A3 present.

**முதல் விசாரணை:–**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா. 1 முதல் 3 வரையிலானவர்களை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்காரர்கள். வழக்கு சம்பவம் தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 26.09.2021 ம் தேதி மாலை 04.30 மணிக்கு அ.சா. 1 அவர் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தபோது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் மூவரும் அ.சா. 1 ஐ பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றும், 1 வது எதிரி கையில் வைத்திருந்த அரிவாளால் அ.சா. 1 ன் இடது காலில் வெட்டினார் என்றும், 2 மற்றும் 3 எதிரிகள் கையில் வைத்திருந்த மூங்கில் கம்பால் அ.சா. 1 ஐ அடித்தார்கள் என்றும் எதிரிகள் மூவரும் போகும்போது அரிவாளைக்காட்டி கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரிக்க வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்காதரவாக சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், போலிசார் விசாரிக்கவில்லை என்றும் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:—**

இல்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.07.21 01:55:03 +0530